# இன்னிசை யாழ்

(விபுலாநந்தரின் யாழ்நூல் ஒரு பார்வை)











முனைவர் மார்கரெட் பாஸ்டின் FSJ

# இந்நூலாசிரியரைப் பற்றி...



முனைவர் சகோதரி மார்கரெட் பாஸ்டின் FSJ அவர்கள் புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபையைச் சேர்ந்த துறவியாவார். இசையில் இளநுண்கலை, முதுநுண்கலை, எம்ஃபில் மற்றும் முனைவர் பட்டத்தை இராணி மேரிக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மற்றும் இரண்டு ஆண்டுகள் சென்னை இராணி மேரிக்கல்லூரியில் விரிவுரையாளராகவும் நான்கு ஆண்டுகள் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் இசைத்துறைத் தலைவர் பொறுப்பிலும் பணியாற்றி தற்போது திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் முதல்வராக **2003**ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகின்றார். முப்பதுக்கும் மேற்பட்ட இசைசொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். **1991**இல் இவரது இசைஅரங்கேற்றம் பாரதீய வித்யாபவனில் அருட் செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் ஐயா அவர்களின் முன்னிலையில் நடந்தேறியது. இவரது இசைகுறித்த ஆய்வுக் கட்டுரைகளுள் ஆறு பிரசுரிக்கப்பட்டுள்ளன. எம்.ஏ பட்டத்தினை (Guidance and Counselling) அன்னை தெராசா பல்கலைக்கழகத்தில் பயின்றதன் விளைவாக பெண்களை முன்னிலைப் படுத்திய “பூவையரின் பூப்புக்கால முதிர்வுகளின் அதிர்வுகள்” என்ற நூலொன்றையும், சென்னைப் பல்கலைக் கழக எம்ஃபில் பட்ட ஆய்வேட்டின் விளைவாக “இன்னிசைச் சிலம்பு” என்ற சிலப்பதிகார இசைகுறித்த நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

**2000**ஆம் ஆண்டில் “காரைக்காலம்மையார்” பற்றிய இசைச் சொற்பொழிவுக்கென சென்னை மியூசிக் அகாதெமியின் பரிசை வென்றுள்ளார். இலால்குடி குடந்தை ப. சுந்தரேசனாரின் அறக்கட்டளை, தமிழிசைக்கு இவர் ஆற்றியுள்ள பணியைப் பாராட்டி **2003**ஆம் ஆண்டில் இவருக்கு “பெரும்பாண நங்கை” என்ற பட்டத்தை அளித்து கௌரவித்துள்ளது. இந்திய இசையில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்துறவி என்ற பெருமைக்குரியவர். காரைக்குடி சாம்பசிவஐயரின் பேத்தி திருமதி. இராஜேஸ்வரி பத்மநாபன் அவர்களிடம் வீணையும், திருமதி. டி. பாலசரஸ்வதியின் சிஷ்யை திருமதி சியாமளா அவர்களிடம் பரத நாட்டியத்தில் ஒரு மார்க்கம் முழுமையும் பயின்றவர். இவரது முனைவர் பட்ட ஆய்வேடே ‘இன்னிசையாழ்’ என்ற நூலாக மலர்ந்துள்ளது.

பல ஆசிரியர்களிடம் இசைபயின்றுள்ள போதும் குரலிசையில் திருமதி. சுகுணா வரதாச்சாரியார் அவர்களையே தம் குருவாகக் கொண்டுள்ளார். தற்சமயம் திருச்சி J. வெங்கட்ராமன் அவர்களிடம் குரலிசையைப் பயின்று வருகின்றார்.

Companion, Try. Tel : 0431 - 2411539